BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரம் ஜூன் மாதத்தில் பாரம்பரிய மாதத்தை மெய்நிகர் முறையில் கொண்டாடுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 1, 2021) – ப்ராம்ப்ட்டன் நகரமானது அதன் பல கலவை கொண்ட பன்முககலாச்சார அமைப்பிற்கு, ஜூன் மாதத்தில் தனது இத்தாலிய, போர்த்துகீசிய மற்றும் பிலிப்பைன்ஸ் சமூகங்களை அங்கீகரிப்பதன் மூலம் பாராட்டுதல் வழங்கும்; கூடவே இந்த ஜூன் மாதத்தை தேசிய பூர்வகுடி மக்களுக்கான மாதமாகவும் அனுசரிக்கும்.

**இத்தாலிய பாரம்பரிய மாதம்**

இத்தாலிய பாரம்பரிய மாதமானது, ஜூன் 2, புதன்கிழமையன்று, இத்தாலிய தேசிய தினத்தில் தொடங்குகிறது; இந்த நாளில் மேயர் பேட்ரிக் ப்ரவுன், வார்டுகள் 7 & 8 க்கான பிராந்திய கவுன்சிலர், பேட் ஃபோர்டினி, மற்றும் வார்டுகள் 2 & 6 க்கான பிராந்திய கவுன்சிலர் மைக்கேல் பல்லேய்ஸ்ச்சி ஆகியோருடைய கருத்துக்களுடன் மெய்நிகர் கொடியேற்ற நிகழ்ச்சியும் நடைபெறும். இவற்றின் வரலாற்றுக்கான அறிமுகம் செய்யப்படுவதுடன் கொண்டாட்டங்களும் இடம்பெறும்: இந்த நாட்டின் இரண்டு பாரம்பரிய உணவு வகைக்கான செய்முறை பயிற்சிகள் (இனிப்பு மற்றும் சுவையானவை) மற்றும் கடந்த கொண்டாட்ட நிகழ்வுகளின் படங்களைக் கொண்ட ஒரு புகைப்பட தொகுப்பு ஆகியவையும் இருக்கும்.

மிக சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில், ப்ராம்ப்ட்டன் நகரத்தில் 25,200 இத்தாலிய வம்சாவளி குடியிருப்பாளர்களைக் கொண்டபடி, முதல் 10 நாடுகளின் வரிசையில் இத்தாலி ஒரு இடத்தை பிடித்துள்ளது.

கொண்டாட்டத்தில் சேர வருகை புரியவும்: www.brampton.ca/italianheritagemonth

**போர்த்துகீசிய பாரம்பரிய மாதம்**

போர்த்துகீசிய பாரம்பரிய மாதமானது, ‘போர்ச்சுகல் தினமாகிய’, ஜூன் 10 ஆம் தேதி வியாழக்கிழமையன்று, மெய்நிகர் கொடியேற்றும் விழாவுடன் துவங்குகிறது; இதில் மேயர் பேட்ரிக் பிரவுன், வார்டுகள் 3 & 4 க்கான பிராந்திய கவுன்சிலராகிய மார்ட்டின் மெடெய்ரோஸ் ; மற்றும் வார்டுகள் 1 & 5க்கான பிராந்திய கவுன்சிலராகிய பால் விசென்ட் ஆகியோருடைய கருத்துக்கள் இடம் பெறுகின்றன. இந்த நாட்டின் வரலாற்றுக்கான அறிமுகம் செய்யப்படுவதுடன் கொண்டாட்டங்களும் இடம்பெறும்; இந்த நாட்டின் இரண்டு பாரம்பரிய உணவு வகைக்கான செய்முறை பயிற்சிகள் (இனிப்பு மற்றும் சுவையானவை) மற்றும் கடந்த கொண்டாட்ட நிகழ்வுகளின் படங்களைக் கொண்ட ஒரு புகைப்பட தொகுப்பு ஆகியவையும் இருக்கும்.

மிக சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில், ப்ராம்ப்ட்டன் நகரத்தில் 24,500 போர்த்துகீசிய வம்சாவளி குடியிருப்பாளர்களைக் கொண்டபடி, முதல் 10 நாடுகளின் வரிசையில் போர்ச்சுகல் ஒரு இடத்தை பிடித்துள்ளது.

கொண்டாட்டத்தில் சேர வருகை புரியவும்: www.brampton.ca/portugueseheritagemonth

**ஃபிலிப்பைன் நாட்டு பாரம்பரிய மாதம்**

ஃபிலிப்பைன் நாட்டு பாரம்பரிய மாதமானது, 1898 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஃபிலிப்பைன்ஸ் நாட்டுக் கொடியேற்றம் நிகழ்ந்ததை நினைவுகூறும் வகையில், ஜூன் 12 ஆம் தேதி சனிக்கிழமையன்று துவங்குகிறது. அன்றைய தினம் மேயர் பேட்ரிக் ப்ரவுன், வார்டுகள் 1 & 5க்கான பிராந்திய கவுன்சிலராகிய ரொவீனா சான்ட்டோஸ் ஆகியோரின் கருத்துக்களுடன் மெய்நிகர் முறையில் ஒரு கொடியேற்ற விழாவும் இருக்கும். முன்னமே ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஃபிலிப்பைன்ஸ் நாட்டு தேசிய கீதம் ஒலிப்பதுடன், வடகிழக்கு ப்ராம்ப்ட்டன் (north-east Brampton) இல் இருக்கின்ற பூங்காவானது, ஃபிலிப்பைன்ஸ் நாட்டின் மகத்தான போராட்ட வீரருள் ஒருவராகிய டாக்டர் ஜோஸ் ப்ரொட்டாஸியோ ரிஸல் அவர்களுக்கென அர்ப்பணிக்கப்பட்டு, அவரது பெயர் சூட்டப்பட்ட நிகழ்ச்சியின் வீடியோவையும் பார்த்து மகிழுங்கள். இந்த நாட்டின் வரலாற்றுக்கான அறிமுகம் செய்யப்படுவதுடன் கொண்டாட்டங்களும் இடம்பெறும்; இந்த நாட்டின் இரண்டு பாரம்பரிய உணவு வகைக்கான செய்முறை பயிற்சிகள் (இனிப்பு மற்றும் சுவையானவை) மற்றும் கடந்த கொண்டாட்ட நிகழ்வுகளின் படங்களைக் கொண்ட ஒரு புகைப்பட தொகுப்பு ஆகியவையும் இருக்கும்.

மிக சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில், நகரத்தில் 20,100 ஃபிலிப்பைன் நாட்டு குடியிருப்பாளர்களைக் கொண்டபடி, முதல் 10 நாடுகளின் வம்சாவளியினரில் ஒருவராக ஃபிலிப்பைன்ஸ் நாட்டு வம்சாவளியினர் இருக்குமிடமாக ப்ராம்ப்ட்டனின் இருக்கின்றது.

.

கொண்டாட்டத்தில் சேர வருகை புரியவும்: www.brampton.ca/filipinoheritagemonth

**தேசிய பூர்வகுடிகளின் வரலாற்றுக்கான மாதம்**

கனடாவில் இருக்கின்ற ஃபர்ஸ்ட் நேஷன்ஸ் (First Nations), இனுய்ட் (Inuit) மற்றும் மேட்டிஸ் (Métis) மக்களின் வரலாறு, பரந்து விரிந்ததன்மை மற்றும் தனித்துவமான பங்களிப்புகளை கவுரவிப்பதற்காக ஜூன் மாதத்தை, தேசிய பூர்வகுடிகளின் வரலாற்றுக்கான மாதமாக நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

கிரெடிட் ஃபர்ஸ்ட் நேஷனின் (First Nations) மிஸ்ஸிஸ்ஸாக ஒப்பந்தப் பிரதேசத்தில் முதலாவதாகவும் அதற்கு முன்னதாக ஹவ்டிநோசாநீ (Haudenosaunee), ஹூரான் (Huron) மற்றும் ஓ-என்-டாட் ( Wendat) யின் பாரம்பரியமான பிரதேசத்திலும், எங்கள் பணி நடைபெறுகிறது என்பதை ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகரித்து ஒப்புக்கொள்கிறது; ப்ராம்ப்ட்டன் நகரை தங்கள் வீடாக கருதுகின்ற பல ஃபர்ஸ்ட் நேஷன்ஸ் (First Nations), இனுய்ட் (Inuit) மற்றும் மேட்டிஸ் (Métis) மற்றும் பிற உலகளாவிய பூர்வகுடி மக்களையும் நாங்கள்

ஏற்றுக்கொள்கிறோம். இந்த மண்ணில் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், மகிழ்ந்து அனுபவிப்பதற்கும் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

இந்த மாதமானது பாரம்பரியம், மாறுபட்ட கலாச்சாரங்கள், தனித்துவமான மொழிகள் மற்றும் பூர்வகுடி மக்களின் ஆன்மீக நம்பிக்கைகள் ஆகியவற்றை பிரதிக்கின்ற ஒரு மாதமாகும்; மற்றும் அத்துடன் (கடந்த காலத்திலும் மற்றும் நிகழ்காலத்திலும்) நமது சமூகத்தை தொடர்ந்து வளமாக்குகின்ற அவர்களின் அபாரமான பங்களிப்புகள் ஆகியவற்றைப் பற்றி சிந்திக்கவும் கற்றுக்கொள்ளவும் இது ஒரு வாய்ப்பாகும்.

புரையோடிப்போன அநீதிகள் மூலம் துயரம் மிக்க பாதிப்புக்கு உள்ளானவர்களை அல்லது உயிரை இழந்தவர்களை நாங்கள் நினைவு கூர்கிறோம்; மேலும் இந்த ஆண்டு கம்லூப்ஸில் (Kamloops) உள்ள ஒரு உறைவிட பள்ளியின் வளாகத்தில் 215 குழந்தைகளின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன; அந்த உடல்களுக்கான ஆத்மாக்களுக்காக இரங்கல் தெரிவிக்கிறோம். நாங்கள் பூர்வகுடி மக்களுடன் ஒன்றிணைந்து நிற்கிறோம்; நல்லிணக்கத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டையும்  வலுப்படுத்துகிறோம்.

ப்ராம்ப்ட்டன் நகரமானது, கலாச்சார விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களின் முக்கியத்துவத்தையும் புனிதமான தன்மையையும் அங்கீகரிக்கிறது. இந்த ஆண்டு COVID-19  தொற்று காரணமாக, கொண்டாட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் வேறுமாதிரி செய்யப்பட்டிருந்தாலும், ஜூன் 21 ஆம் தேதி திங்கட்கிழமையன்று 'தேசிய பழங்குடி மக்கள் தினத்தை' ஒரு மெய்நிகர் முறையில் கொண்டாடுவதற்கு நகரம் உறுதி பூண்டுள்ளது; இது அவர்களின் அனுபவங்களை அங்கீகரிக்கவும், அவர்களின் தனிப்பட்ட தேவைகளை கருத்தில் கொண்டு, செவிமடுத்து, அவர்களின் குரல்களையும்  கதைகளையும் ஓங்கி ஒலிக்கச்செய்யவும் உதவும்.

'தேசிய பூர்வகுடி மக்கள் தினத்தின்' ஆன்லைன் கொண்டாட்டங்கள் மெய்நிகர் முறையில் கொடியேற்றம் செய்யும் விழாவுடன் தொடங்குகின்றன; அதைத் தொடர்ந்து கிரவுன் லேண்ட்ஸின் (Crown Lands) ஆன்லைன் 'நிகழ்த்துகலை' இருக்கும். பூர்வகுடியினரது பூமி அவர்களுடையதுதான் என்று, மிஸ்ஸிஸ்ஸாகாஸ் ஆஃப் தி நியூ கிரெடிட் (Mississauga's of the New Credit) அமைப்பின் தலைவராகிய  ஆர். ஸ்டேசி லாஃபோர்ம் அவர்கள் ஒப்புக்கொள்ளும் நிகழ்ச்சியும் இருக்கும்; ஒரு விருந்துபசரிப்பு; ஒரு மெய்நிகர் முறையில் டிரேசி வைட்ஐ (Tracey Whiteye) அவர்களுடன் ஸ்ட்ராபெரி மூன் டீச்சிங் (Strawberry Moon Teaching) ; மற்றும், மூத்த குடிமக்களாகிய  ஜாபாக்வே(Jaabaakwe ) மற்றும் ஜாய்ஸ் தபோபோண்டுங் (Joyce Tabobondung) ஆகியோருடன் ஒரு பாரம்பரிய சோள சூப் அருந்தும் நிகழ்ச்சி ஆகியவையும் இருக்கும். மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்:www.brampton.ca/NIPD.

ஜூன் மாத கொண்டாட்டங்கள் அனைத்துமே,  இந்த ஆண்டில்,  ஒன்ட்டேரியோ மாகாண சுகாதார அமைச்சகம் மற்றும் பீல் பொது சுகாதார அமைப்பின்  COVID-19  தொற்றுபரவல் பேரிலான உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி மெய்நிகர் நிகழ்வுகளாக இருக்கும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"இந்த ஜூன் மாதத்தில், வியக்கத்தக்க நமது பன்முகத்தன்மை கொண்ட நகரத்தின் துடிப்பான சமூகங்களின் பங்களிப்புகளை நாங்கள் அங்கீகரித்து கொண்டாடுகிறோம். நமது நகரத்தின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்ற, அனைவரையும் உள்ளடக்கிய, ஒரு கட்டமைப்பை உருவாக்க பல்வேறு கலாச்சார நிகழ்வுகளுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் போன்ற பெரியதொரு நகராட்சிக்கு, பணியிடம் மற்றும் சமூகம் ஆகிய இரு தரப்பிலும் பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள் சேர்த்தல் ஆகியவை முக்கியம். குடியிருப்புவாசிகளுக்கு பிற கலாச்சாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், எங்கள் நகரத்தை உருவாக்கும் பல சமூகங்களை அறிந்து கொள்ளவும் இந்த கொண்டாட்டங்கள் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- *ஹர்கிரத்சிங், நகர கவுன்சிலர், வார்டுகள்* 9 & 10; *தலைவர்*, *பெறுநிறுவன சேவைகள்*, *ப்ராம்ப்ட்டன் நகரம்*

"இந்த ஆண்டின் பாரம்பரிய மாத கொண்டாட்டங்களின் போது, ப்ராம்ப்ட்டன் நகர் பூங்கா ஒன்றுக்கு பிலிப்பைன்ஸின் மிகச்சிறந்த போராட்ட வீரர்களில் ஒருவரான டாக்டர் ஜோஸ் ப்ரொட்டாஸியோ ரிஸல் அவர்களின் பெயரை நாங்கள் அர்ப்பணிப்புடன் சூட்டுகிறோம். ப்ராம்ப்ட்டன் நகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிலிப்பைன்ஸ் நாட்டவர் என்ற முறையில், இந்த புதிய பூங்காவை எங்கள் சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், வியக்கத்தக்க அளவிலான பெருமை அடைகிறேன். "

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5;* துணைத் *தலைவர்*, *பெறுநிறுவன சேவைகள்,* ப்ராம்ப்ட்டன் நகரம்

"பாரம்பரிய மாதத்தை கொண்டாடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்; மற்றும் பணியிடத்தில் பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்சேர்ப்பது ஆகியவை எங்கள் அமைப்பிற்கு புதிய கண்ணோட்டங்களைக் கொண்டுவருவதை அங்கீகரித்து மகிழ்ச்சி கொள்கிறோம். இது பொதுமக்களுக்கு சிறப்பாக சேவை செய்ய எங்கள் சமூகத்தின் தேவைகளை இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்வதை மேம்படுத்துகிறது."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca